ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 9.3 – தன்னை நைவிக்கிலேன்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.3 – தன்னை நைவிக்கிலேன்

‡ தன்னை நைவிக்கிலேன் ⋆
வல் வினையேன் தொழுதும் எழு ⋆
பொன்னை நைவிக்கும் ⋆
அப்பூஞ்செருந்தி மணம் நீழல்வாய் ⋆
என்னை நைவித்து ⋆
எழில் கொண்டகன்ற பெருமான் இடம் ⋆
புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து ⋆
அழகாய புல்லாணியே ‖ **9.3.1** ‖

உருகி நெஞ்சே ! நினைந்திங்கிருந்தென் ⋆
தொழுதும் எழு ⋆
முருகு வண்டுண் மலர்க் கைதையின் ⋆
நீழலில் முன் ஒருநாள் ⋆
பெருகு காதன்மை ⋆
என் உள்ளம் எய்தப் பிரிந்தான் இடம் ⋆
பொருது முந்நீர்க் கரைக்கே ⋆
மணி உந்து புல்லாணியே ‖ **9.3.2** ‖

ஏது செய்தால் மறக்கேன் ⋆
மனமே ! தொழுதும் எழு ⋆
தாது மல்கு தடம் சூழ் பொழில் ⋆
தாழ்வர் தொடர்ந்து ⋆
பின் பேதை நின்னைப் பிரியேன் இனி ⋆

என்றகன்றான் இடம் ⋆
போது நாளும் கமழும் ⋆
பொழில் சூழ்ந்த புல்லாணியே ‖ **9.3.3** ‖

கொங்குண் வண்டே கரியாக வந்தான் ⋆
கொடியேற்கு ⋆
முன் நங்கள் ஈசன் ⋆
நமக்கே பணித்த மொழி செய்திலன் ⋆
மங்கை நல்லாய் ! தொழுதும் எழு ⋆
போய் அவன் மன்னும் ஊர் ⋆
பொங்கு முந்நீர்க் கரைக்கே ⋆
மணி உந்து புல்லாணியே ‖ **9.3.4** ‖

உணரில் உள்ளம் சுடுமால் ⋆
வினையேன் தொழுதும் எழு ⋆
துணரி நாழல் நறும் போது ⋆
நம் சூழ் குழல் பெய்து ⋆
பின் தணரில் ஆவி தளரும் என ⋆
அன்பு தந்தான் இடம் ⋆
புணரி ஓதம் பணிலம் ⋆
மணி உந்து புல்லாணியே ‖ **9.3.5** ‖

எள்கி நெஞ்சே ! நினைந்திங்கிருந்தென் ⋆
தொழுதும் எழு ⋆
வள்ளல் மாயன் மணிவண்ணன் எம்மான் ⋆
மருவும் இடம் ⋆
கள் அவிழும் மலர்க் காவியும் ⋆
தூமடல் கைதையும் ⋆

புள்ளும் அள்ளல் பழனங்களும் சூழ்ந்த ⋆
புல்லாணியே ॥ **9.3.6** ॥

பரவி நெஞ்சே ! தொழுதும் எழு ⋆
போய் அவன் பாலம் ஆய் ⋆
இரவும் நாளும் இனிக் ⋆
கண் துயிலாதிருந்தென் பயன் ⋆
விரவி முத்தம் ⋆
நெடு வெண் மணல் மேற் கொண்டு ⋆
வெண் திரை புரவி என்னப் புதம் செய்து ⋆
வந்துந்து புல்லாணியே ॥ **9.3.7** ॥

அலமும் ஆழிப் படையும் உடையார் ⋆
நமக்கன்பர் ஆய் ⋆
சலம் அதாகித் தகவொன்றிலர் ⋆
நாம் தொழுதும் எழு ⋆
உலவு கால் நற்கழி ஓங்கு ⋆
தண் பைம் பொழிலூடு ⋆
இசை புலவு கானல் ⋆
களி வண்டினம் பாடு புல்லாணியே ॥ **9.3.8** ॥

ஓதி நாமம் குளித்துச்சி தன்னால் ⋆
ஒளி மா மலர் ⋆
பாதம் நாளும் பணிவோம் ⋆
நமக்கே நலம் ஆதலின் ⋆
ஆது தாரான் எனிலும் தரும் ⋆
அன்றியும் அன்பராய் ⋆

போதும் மாதே ! தொழுதும் ⋆
அவன் மன்னு புல்லாணியே ॥ **9.3.9** ॥

‡ இலங்கு முத்தும் பவளக் கொழுந்தும் ⋆
எழில் தாமரைப் ⋆
புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து ⋆
அழகாய புல்லாணி மேல் ⋆
கலங்கல் இல்லாப் புகழான் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
வலங்கொள் தொண்டர்க்கிடம் ஆவது ⋆
பாடில் வைகுந்தமே ॥ **9.3.10** ॥

அடிவரவு — தன்னை உருகி ஏது கொங்கு உணரில் எள்கி பரவி அலம் ஓதி இலங்கு காவார்

தன்னை நைவிக்கிலேன் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்